Sri S. MADHAVAN : R.R. Notification has already been cancelled and it has been notified as a new Inam estate under the Madras Act 26 of 1963.

1374-ம் பசலிக்கு அவர்கள் ஏற்கனவே தேவஸ்தான மேல்வாரம் தாரர்களுக்கு தீர்வை கொடுத்துவிட்டார்கள். அந்த 1374-க்கே மீண்டும் கொடுக்க வேண்டும் என்று சொல்வது சரியல்ல. ஏற்கனவே செய்த ஆர். ஆர். நோட்டிபிகேஷன் கான்சலாகி விட்டது. ஆகவே இதுபற்றி பரிசீலனை செய்வார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : கனம் அங்கத்தினர் இதைப்பற்றி தனியாக எழுதினால் பரிசீலனை செய்து அந்தக் கிராமத்திற்கு அரசாங்கம் விசேஷ கவனம் செலுத்தும்.

Cattle from Australia

* 247 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether our State has received any gift of cattle, by the Australian " Society for those who have less "; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) 14 மாடுகள் (4 காளைகளும், 10 பசுக்களும், கிடாரிகளும்) தமிழ் நாடு அரசாங்கத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அவற்றில் 10 மாடுகள் (4 காளைகளும், 6 பசுக்களும்) அரசாங்கமே விலங்கின வளர்ப்புத் துறைக்கும், 4 பசுக்கள் சாலிக் கிராமத்திலுள்ள சேவா சமாஜம் ஆண்கள் இல்லத்திற்கும் வழங்கப்பட்டுள்ளன.

திரு. சா. கணேசன் : ஆஸ்ட்ரேலியாவில் இருந்து 20 மாடு களுக்குள்ளே தான் வந்தனவா ? அல்லது மேலும் கிடைத்ததா ? மேலும் கிடைப்பதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அவர்கள் கொடுத்த மாடுகள் 16. ஆனால் அங்கிருந்து இங்கே ஒரு மாட்டைக் கொண்டு வரவே அதிகம் செலவாகிறது. ஆகவே, அவர்கள் கொடுத்த உதவியை மட்டும் பெற்றுக்கொண்டோம்.

திரு. எம். வி. கரிவேங்கடம் : அங்கிருந்து அவர்கள் கொடுத்த மாடுகளைக் கொண்டு வருவதற்கான செலவு எவ்வளவு? அந்தப் போக்குவரத்துச் செலவை யார் ஏற்றுக்கொண்டார்கள் ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தச் செலவு நம்முடையது தான். ஒரு மாட்டுக்குக் கிட்டத்தட்ட 5 ஆயிரம் செலவாகிறது. மொத்தத்தில் 65 ஆயிரம் செலவு செய்திருக்கிறோம்.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்த 14 மாடுகளையும் கொண்டு வருவதற்கான செலவே 65 ஆயிரம் ரூபாய்க்கு மேல் ஆகிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இதை 65 ஆயிரம் ரூபாய் செலவு செய்தது சரியென்று அரசாங்கம் கருதுகிறதா ? அதற்குத் தகுந்த மாடுகள்தானா என்று அறிய விரும்புகிறேன்.

11th March 1966]

கனம் திரு. பூ. கக்கன்: அந்த மாடுகள் நல்ல பால் கொடுக்கிற மாடுகள்தான். வமிச அபிவிருத்தி அதிகமாக ஏற்படுகிறது.

அரசாங்க மருத்துவ மனைகள்

*248 கேள்வி.—**திரு. பி. முருகையன்:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆலங்குடியிலுள்ள அரசாங்க மருத்துவ மனைக்கு வேறொரு கட்டடம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது உண்மையா?

(இ) ஆமெனில், இன்னும் வேலை ஆரம்பிக்கப்படாமைக்குக் காரணமென்ன?

(உ) மேற்படி வேலை எப்போது தொடங்கப்படும்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) முதல் (உ) வரை; ஆலங்குடியிலுள்ள அரசாங்க மருத்துவ மனைக்குப் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு தேவையான நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு வருகின்றன. இந்த கட்டடத் திட்டம் 1967-68-ம் ஆண்டில் II-ம் பாகத் திட்டமாக ஆலோசனை செய்யப்படும்.

*249 கேள்வி.—**திரு. சி. சிவசுப்பிரமணியன்:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் டவுன் அரசாங்க பெரிய ஹாஸ்பிட்டலை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசிலனையிலிருக்கின்றதா?

(இ) ஆமெனில், அது எந்த நிலையிலுள்ளது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) & (இ) சிதம்பரம் அரசாங்க மருத்துவ மனைக்குப் புதிய இடத்தில் புதுக் கட்டடம் கட்டுவது 1966-67-ம் ஆண்டில் II-ம் பாகத் திட்டமாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

பஞ்சாயத்துக்களை நகரசபைகளாக மாற்றுதல்

*250 கேள்வி.—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் தலநிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள பண்ணுருட்டி, நெல்லிக்குப்பம் ஆகிய டவுன் பஞ்சாயத்துக்களை நகரசபைகளாக மாற்றும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசிலனையிலிருக்கிறதா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) & (இ) ஆம். நெல்லிக்குப்பம், பண்ணுருட்டி பஞ்சாயத்துக்களை நகரசபைகளாக மாற்றும் திட்டம் அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறது.